**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 134/2019 |
| Name | : | Gokulakrishnan (SSI of Police) |
| P.W. | : | 6 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

சாட்சிக்கு கண் அறுவை சிகிச்சை மேற்கொண்டுள்ளதால் Microsoft teams செயலி மூலம் சாட்சி ஆஜராக அனுமதி வழங்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு Microsoft teams செயலி முதல் விசாரணை சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 12.09.2014 ம் தேதி அன்று மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக நிலைய பொறுப்பு பணியில் இருந்த போது மைவாடியைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று புகாரின் தன்மைக்கேற்ப மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 211/2014 இதச பிரிவுகள் 279, 304(ஏ) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் மற்றும் புகாரை இணைத்து உடுமலை நீதித்துறை நடுவர் எண். 1 க்கும் நகல் மற்றும் புகாரை மேல்

விசாரணைக்கு காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) புகார் எழுத்து மூலமாக பெறப்பட்டதா அல்லது வாய் மொழியாக பெறப்பட்டதா என்றால் எழுத்து மூலமாக பெறப்பட்டது. புகாரை கொடுத்தவர் சிவக்குமார். அவர் மடத்துக்குளத்தை சேர்ந்தவர் ஆவார். நான் எனது முதல் விசாரணையில் மைவாடி என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் காரத்தொழுவைச் சேர்ந்தவர் ஆவார். மைவாடி அல்ல. சம்பவம் எந்த தேதியில், எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால் 12.09.2014 ம் தேதி அதிகாலை 04.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டநேரம் என்ன என்றால் அன்றைய தினமே காலை 09.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையை நான் தான் கைப்பட எழுதினேனா என்றால் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுான். நான் தான் எழுதினேன். புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.06 17:06:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்